https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஐங்குறுநூற்றில் தலைவனின் கூற்றும் சூழலும் மனவெளிப்பாடும்

**மு. சூரி ராஜு**
(பதிவு எண்: R20162917)
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் மு. இராஜலெட்சுமி**
ஆய்வு நெறியாளர், தமிழ் உயராய்வு மையம்
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
முத்துப்பேட்டை,அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**ஆய்வுச் சுருக்கம்**

*உலக இலக்கியங்கள் அனைத்தும் மானுட வாழ்வின் நெறிமுறைகளையும், ஒழுகலாறுகளையும், சீர்மிகு பண்பாட்டுச் சிறப்புக்களையும் உணர்த்துவதற்காக காலந்தோறும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து விட்ட போதும் இப்பாரத மண்ணில் எத்தனையோ வேறுபாடுகள், மாறுபாடுகள் ஆகிய இவற்றிற்கிடையேயும், நமது நாட்டின் பண்பாட்டினையும், பாரம்பரியத்தை யும், அறத்தோடு கூடிய பெருவாழ்வையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. அந்த வகையில் தோன்றிய இலக்கியங்களே சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியத்தை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என வகைப்படுத்துவர் சான்றோர். எட்டுத்தொகை நூல்களுள் ஐங்குறுநூற்றில் தலைவனின் கூற்றும் சூழலும் மனவெளிப்பாடும் அமைந்துள்ள பாங்கினை ஆராய்ந்து வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்*

**திறவுச்சொற்கள்:** *ஒழுக்கம், களவியல் மாந்தர்கள், கற்புகுரிய மாந்தர்கள், மன வெளிப்பாடுகள், காதல் வேட்கை.*

## முன்னுரை

*சங்க இலக்கியங்கள் என்பவை எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். அதில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு நூறும் பத்துப்பத்தாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பத்தும் பத்துப் பாக்களைக் கொண்டுள்ளது. ஆதலால் உட்பிரிவுகள் பத்து என்ற பெயரை பெற்று விளங்குகின்றன. ஐங்குறுநூற்றில் தலைவனுக்கு மொத்தம் தொன்னூற்றொரு பாடல்கள் மட்டும் காணப்படுகின்றன. இப்பாடல்களில் தலைவன் தீராத காதல் வேட்கையால் தன் நெஞ்சோடு புலம்பல், தலைவியிடம் புலம்பல், பிற மாந்தர்களிடம் புலம்பல், பரத்தையரை நாடுதல், வாயில் நேர்தல், தலைவியை பிரிந்து செல்லும் நிகழ்வு, பாங்கனிடம் பேசுதல், தலைவியை புகழ்ந்து பேசுமிடங்கள் போன்றவை பாடுபொருள்களாக அமைந்துள்ளது. தலைவன் கூற்றுகளின் பாடுபொருளை இடம், சூழல் என்ற பிரிவுகளுக்குட்படுத்தி அவற்றை தொல்காப்பியரின் செய்யுள் உறுப்பான முன்னத்துடன் பொருந்திப் பார்த்து அதன் இலக்கிய அமைப்பியலை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

### கூற்று விளக்கம்

சங்க அகப்பாடல்களில் தலைவன் தலைவி ஆகிய இரு மாந்தரையும் மையப்படுத்தியே அகவாழ்வு பின்னப் பட்டுள்ளன. இவர்கள் கூற்றின் மூலம் பிற வாயில்களின் பண்பு நலன்களை அறிய முடிகிறது. எனவே கூற்று நிகழ்த்தும் மாந்தர்களைக் கூறுவோர், கேட்போர் என்ற வகை முறைகளாகவே தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

ஒரு கூற்றிலுள்ள கருத்தை மற்றொருவர் உணர்ந்துகொள்ள வேண்டுமானானல் பேசுபவர், கேட்பவர், மொழி, இடம், காலம் என்ற ஐந்தும் இன்றியமையாத தாகும். இக்கூற்று முறைகளைக் கூற்றுச் சூழல் எனலாம். ஒரு மாந்தர் எல்லா மாந்தரிடமும் கூற்று நிகழத்துவதில்லை. இவர்களுக்கு இடையே வரையறை உண்டு. இதனைத் தொல்காப்பியர் அகத்திணையியல், களவியல், கற்பியல், செய்யுளியல் ஆகிய இயல்களில் விளக்குகின்றார்.

அக இலக்கியக் கூற்றுகளைக் களவுக் கூற்றுக்குரியோர், கற்புக் கூற்றுக்குரியோர் என இருவகையாகப் பிரித்துள்ளார். இதில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பன், பாங்கன் ஆகிய அறுவர் களவில் கூற்று நிகழ்த்துவார்கள். இதனை,

**பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி**
**சீர்த்தகுசிறப்பின் கிழவன் கிழத்தியோடு**
**அளவியல் மரபின் அறுவகையோரும்**
**களவினில் கிளவிக்கு உரியர் என்ப[1]**

என்ற நூற்பாவில் அறியலாம்.

பாணன், கூத்தர், விறலியர், பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவரும் கற்பில் கூற்று நிகழ்த்துவர். மேற்காட்டிய களவுக்குரியோரும், கற்பில் கூற்று நிகழத்துவார்கள். இதனை,

**பாணன், கூத்தன், விறலி, பரத்தை**
**யாணம் சான்ற அறிவர், கண்டோர்**
**பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா**
**முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்**
**தொல்நெறி மரபின் கற்பிற்குரியர்[2]**

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம். எனவே சங்க இலக்கியத்தில் இடம் பெறும் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி, பாணர், கூத்தர், விறலியர், பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய பன்னிரு மாந்தர்களை யும் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறுகின்றார். தலைவன், தலைவி, தோழி, பாங்கன், தாய், அறிவர், கண்டோர், ஊரார், அயலோர், தந்தை, தமையன், தமக்கை ஆகியோர் கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள். இவர்கள் முன்னே நின்று கேட்பாரின் மனஉணர்வை அறிந்திருப்பர். ஆனால் அறியாதது போல கூற்று நிகழ்வதுண்டு. புறப்பாடலில் கூற்று நிகழ்த்துவோர் கேட்போரின் மன உணர்வை அறிந்து கூற்று நிகழ்த்துவதைக் காண முடிகின்றது. எனவே கூறுவோருக் கும், கூற்றைக் கேட்போருக்கும் இடையே சூழல் முக்கியமாகின்றது.

### தொல்காப்பியரின் களவுக்கோட்பாடு

தலைவனும், தலைவியும் களவு வாழ்வில் பல்வேறு இடங்களில் கூற்று நிகழும் அவைகளில் தலைவனுக்குரிய களவுக்கூற்று பின்வருமாறு,

**மெய்தொட்டுப்பயிறல், பொய் பாராட்டல்**
**இடம்பெற்றுத்தழாஅல், இடையூறு கிளத்தல்**
**நீடுநினைந்து இரங்கல், கூடுதல் உறுதல்,**
**சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்[3]**

என்று தலைவியின் உடலைத் தொட்டுப் பழகிக் கூச்சத்தைப் போக்குதல் பொய்யாகப் புனைந்து அவள் நெற்றி, கூந்தல் போன்றவற்றைப் பாராட்டுதல், அவளை நெருங்கித் தழுவுதல், நாணமுற்று விலகுவதால் தான் துன்புறுவதைக் சொல்லுதல், அவள் இணங்காதவள் போலக் காணப்படுதலால் எப்போது இசைவாளோ என்று நீண்டநேரம் நினைந்து இரங்குதல், கூடி மகிழ்தல், தான் கூடிய நுகர்ச்சியை விரைந்து பெற்றவிடத்து அவ்வின்பத்தில் திளைத் தல், அப்போது அவளது தீராத அச்சத்தைத் தீர்த்து உறுதி கூறித் தேற்றுதல், இவை எட்டும் இயற்கைப் புணர்ச்சியாம் முதல் கூட்டத்தில் நிகழும் தலைவனுக்குரிய களவுக் சூழலாகும்.

அடுத்தடுத்துத் தலைவியைப் பெற்ற வழி மகிழ்தல், பிரிய நேர்ந்த வழிக் கலங்கல், நிலையான இல்லறவாழ்வு நெறிகளை நினைந்து அதற்குத்தக்க நிகழ வேண்டிய வற்றைப் பேசுதல், தன்னிடம் குற்றம் கண்டு கழறிய பாங்கனிடம் அவன் ஏற்குமாறு தன் காதலால் விளக்குதல், தலைவியால் விரும்பப்பட்ட அவளின் உயிர்த்தோழியை அணுகித் தலைவி;யை அடைய உதவுமாறு வலியுறுத்தி இரத்தல், தினைப் புனத்தில் கண்டபோது உங்கள் ஊர் எது, போர் என்ன, என்று வினவி

அணுகுதலுண்டு. நான் வேட்டையாடிய மான் தப்பித்துவிட்டது, இப்பக்கம் வந்தா என வினாவுதல், இத்தகைய நீர்மைப் பண்புடைய வினாக்களை நிரம்பச் சொல்லித் தோழியிடம் குறையிரந்து வேண்டுதல், தலைவிமேல் குறையைக் சார்த்தி தோழி உண்மையை அறியும்படி கூறுதல், திரும்பத் திரும்பத் சளைக்காது கெஞ்சுதல், பிறவாறு தோழி அலக்கழிக்கும் போது பேசுதல், தோழி யைக் கேட்டுக் கெஞ்சுதலினும் நேரே சென்று தலைவியைத் தழுவிக் கொள்ளு தல், எல்லாம் அறிந்து மதியுடன்பட்ட தோழி ஐயப்பட்டு மறுக்கும் போது, அதனால் வரும் கேடு தனது பெருமையும் கூறி வேண்டுதல், தோழி வாரற்க எனத் தடுப்பதனால் ஏற்படும் நிலையில் பேசுதல், எதுவும் இயையாத வழி மடலேறுவேன் என அச்சுறுத்தல், இவையாவும் தலைவன் பால் நிகழக் கூடிய களவு சூழல் என்பதை தொல் காப்பியம் மூலம் அறிய முடிகிறது.

## ஐங்குறுநூற்றில் தலைவன் கூற்று அமைவு

காதலை ஒரு தெய்வ உணர்ச்சியாகப் போற்றி வளர்த்த தமிழர்கள் அக்காதல் உணர்ச்சிகளுக்குப் பாத்திரங்களான தலைவன், தலைவியர் ஊழின் வலியால் கூட்டப்பெறுவர் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். சங்க இலக்கியத்தில் உள்ள ஐங்குறுநூற்றில் மொத்தம் தலைவனுக்குரிய பாடல்கள் 91 ஆகும். இப்பாடல்களில் தொல்காப்பியர் கூறிய முன்னத்தின் பொருள்படி தலைவன் கூற்று இவர் இவருக்கு இன்னமொழியில் தான் கூறவேண்டும் எனவும் அவர்களின் மனநிலை அறிந்து கூறுவதாகவும் ஐங்குறு நூற்றில் தலைவன் பாடல்கள் காணப் படுகின்றன.

மேலும் ஐங்குறுநூற்றில் தலைவன் மிகச் சிறந்த பண்பாளனாகவும், அற உணர்வு கொண்டவனாகவும், சொன்ன சொல் தவறாத நேர்மையாளனாகவும், தலைவி யின் மேல் தீராத காதலினை உடையவ னாகவும், வீரத்தில் சிறந்தவனாகவும் போற்றப்படுகின்றான்.

மருதத்திணையில் உள்ள எருமைப் பத்தில் பாடல் 94 வரைவிடை வைத்து பிரிந்த தலைவன் மீண்டபோது, தன் உடையர்க்குச் சொல்வதாக அமைந்து ள்ளது. 97 வது பாடல் தன்னுள்ளே கூறி மகிழ்வது, 99வது பாடல் தலைமகள் வாயில் நேர தலைவி உவப்புடன் கூறுவதாக உள்ளது.

நெய்தல் திணையில் உள்ள தொண்டிப்பத்தில் 171 வது பாடல் தலைவியின் அருமையைத் தன்னுள்ளே வியந்து கூறுவதாகவும், 172, 174—176 ஆகிய பாடல்கள் தலைவன் பேசுவதாக வும், 178வது பாடல் தலைவன் தோழியி டம் தன் விருப்பத்தை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் வேண்டுவதாகவும் அமைந்துள்ளது. மேலும் 185வது பாடல் தோழிக்கு தலைமகன் கூறுவதாகவும், 188வது பாடல் தலைவியின் இல்வாழ் க்கை சிறப்புக்கண்டு மகிழ்தல், 191வது பாடல் பாங்கனுக்கு தலைவன் கூறுவ தாக அமைந்துள்ளது.

குறிஞ்சி திணையில் உள்ள குன்றக் குறவன் பத்தில் பாடல் 225இல் நண்பனி டம் தான் காதல் கொண்டதாகத் தலைவன் கூறுதல், 256இல் தோழிக்கு தலைவன் கூறுவதாகவும், 259, 281, 288, 291, 293, 298, 299 ஆகிய பாடல்கள் தலைமகனின் கூற்றாகவே அமைந்துள்ளது.

பாலைத் திணையில் உள்ள இடைச் சுரப் பத்தில் பாடல் 321இல் இடைச் சுரத்தில் தலைமகனின் குணத்தை நினைத்து இரங்கி சொல்லுதல் 322 – 330 ஆகிய பாடல்கள் தலைவியின் நினைவுகளை கூறுவதாகவும், 355, 356, 359 ஆகிய பாடல்கள் தலைவனின் கூற்றாகவே அமைந்துள்ளது. 360, 361 வரை தலைவன் பேசுவதாக உள்ளது. 363வது பாடல் தலைமகளை நலம் பாராட்டுதல் 365இல் தலைவன் மாந்தளிர்களைக் கண்டு தன் காதலியின் அழகை பாராட்டுதல் 395, 396 ஆகிய இரண்டு பாடலும் உடன் போய் மீண்ட தலைமகன் தலைமகளுக்கு சொல்வது, முல்லைத் திணையில் உள்ள கார்பருவம் வருவதற்கு முன்பே தான் வந்ததைக் தலைமகளிடம் கூறுவது, 422வது பாடல் தேர்ப்பாகனுக்கு சொல்வதாகவும், 425 – 430வது பாடல் முழுவதும் தலைமகன் கூற்றாகவும் 441 – 450, 477வது பாடல் பாணனுக்கு பதிலளிப்பதாகவும், 478, 479 பாணன் தலைவி பால் தூது வந்ததற்கு தலைவி கூறுவதாகவும், 481–495வது பாடல்கள் வினைமுற்றி மீண்ட தலை மகன் தேர்பாகற்குச் சொல்வதாக அமையப்பெற்றுள்ளது. மேலும் தலைவன் கூற்று அமைவில் களவுக் காலத்தில் நலம் பாராட்டல், சந்திப்பு இடையீடு, தலைவி இற்செறிப்பு, திருமண மறுப்பு ஆகிய சூழலும், கற்புக்காலத்தில் பரத்தையின் காரணமாக ஊடல் நீடிப்புச் சூழலும் தலைவன் கூற்றுப் பாடல்களில் காணப்படுகின்றன.

### தலைவன் கூற்றும் சூழலும்

ஐங்குறுநூற்றில் தலைவன் அவனின் காதலைத் தானே தன் நெஞ்சிற்குள் கூறும் கைக்கிளைப் பாடல்களில் உள்ள கூற்றுச்சூழல், இடம், காலம், மனவெளிப் பாடு ஆகியவைகளைத் தொல்காப்பியர் கூறிய செய்யுள் உறுப்பான முன்னத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. ஐங்குறுநூற்றில் தலைவன் கூற்று தலைவி, தோழி, பாணன், சுற்றத்தார் போன்ற வாயில்களோடு பேசும் சூழலும் அமையப் பெற்றுள்ளது. தலைவன் கூற்றில் தொல்காப்பியர்,

**சொல் எதிர் மொழிதல், அருமைத்து ஆகலின்**[4]

எனத் தொல்காப்பியர் கூறிய கைக் கிளைப் பொருள்கேற்றவாறு காலம் கொண்ட தலைவன், பருவம் எய்தாத அழகும் குணமும் பெற்ற இளம்பருவ மங்கையைக் கண்டு காதல் கொள்கின்ற அவளது மாசற்ற அழகில் மயங்கி அவளிடம் காதல் உணர்வையும் நேரே சென்று, சொல்லி இன்புற முடியாமல் தன்னுடைய நெஞ்சிற்கு கூறுகிறான். எனவே இளம் மங்கையைக் கண்டு காமம் கொள்வது அன்பின் ஐந்திணைக்கு முன்னோடியாய் அமைகிறது. எனவே இந்நிகழ்வு களவுக்காலம் என்றாகிறது.

### தலைமகனின் பண்புகள்

தலைமகன் என்பவன் கல்வியறிவு ஒழுக்கங்களால் சிறந்தவன். வழிவழியே வரும் உயர்குடியில் பிறந்தவன். பெருஞ் செல்வத்தினன், இவனும் தலைவியும் ஒருயிரும் ஈருடலும் போன்று நட்பினை யுடையவர்கள். இவர்கள் தொடர்பு பிறவி தோறும் தொடர்ந்து வருவதைக் கூறப் பெறும். இதனைத் தொல்காப்பியர்,

**ஒன்றே வேறே என்று இருபால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**[5]

என்று சிறப்பிப்பர். மகன் என்ற சொல் வெறும் ஆண்மகனை மாத்திரம் குறிக்கும் சொல் அன்று, நல்லூழின் பெருக்கால் எய்தலாகும். எல்லா உயர்வுகளும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற பெருந்தகையை மட்டி லும் குறிப்பிடும் சொல் இது. இத்தகைய தலைமகனுடைய இலக்கணத்தை தொல்காப்பியர்,

**பெருமையும் உரனும் ஆடுஉமேன**[6]

என்று பெருமை என்பதற்கு அறிவு, ஆற்றல், புகழ், கொடை, ஆராய்ச்சி, பழிபாவங்களுக்கு அஞ்சுதல் ஆகிய பெருமைக்குரிய குணங்கள் என்றும், ஊரன் என்பதற்குக் கடைப்பிடியும் நிறையும் கலங்காது துணிதலும் முதலிய வலிமையின் பகுதி என்று நச்சினார்க் கினியர் கூறுவர். இறையனார் களவியலு ரையாசிரியர் அறிவு, நிறை, ஒர்ப்பு, கடைப்பிடி என்பவற்றைத் தலைமகனது குணங்களாகக் கூறுகின்றனர்.

### தொல்காப்பியத்தில் தலைவன் கூற்று

தலைமகன் உடன்போக்கில் தலைவியுடன் தங்கள் சுற்றத்தாரைப் பிரியும் பிரிவிலும் பொருள்தேடவும், கல்விக்காகவும், தொழிலுக்காகவும், அரசர்க்குத் தூது செல்வதற்காகவும், போர் கருதியும் நாட்டைக் காக்கவும், பரத்தையர்க்காக வும், பிரியும் பிரிவுகளிலும் என அனைத்திலும் தலைவன் பேசும் இடங்கள் உண்டு. இதனை,

**ஒன்றாத் தமரிடனும் பருவத்தும் சுரத்தும்**
**ஒன்றிய தோழியோடு வலிப்பினும் விடுப்பினும்**
**இடைச்சுர மருங்கின் அவள் தமர் எய்திக்**
**கனடக் கொண்டு பெயர்த்தலிற் கலங்குஅஞர் எய்திக்**
**கற்பொடு புணர்ந்த கௌரவ உளப்பட**
**அப்பாற்பட்ட ஒருதிறந்தானும்**[7]

என்ற நூற்பாவில் தங்கள் காதலுக்கு ஒப்புக் கொள்ளாத சுற்றத்தார் வெப்பமிக்க பருவம் கொடிய பாலை வழி ஆகியவை பற்றி தங்கள் உடன் போக்கிற்கு ஒன்றிப் பழகும் தோழியுடன் பேசி, உடனழைத்துச் செல்ல வற்புறுத்தி னாலும் தலைவியை விடுத்துத் தான் மட்டும் போக நினைத்தாலும் இவை பற்றிக் கூற்று நிகழ்த்துவான். தலைவன் சில போது பாலை வழியிடையே அவள் சுற்றத்தார் வந்து, அவளை மீட்டுக் கொண்டு போய்விடுவர். அதனால் மனங்கலங்கிப் பெருந்துயரடைந்து தலைவியின் கற்பைக் காக்கும் முயற்சியை அறியாத ஊரார் அவள்மீது பழி தூற்றவரே என வருந்துவான். இவை உடன்போக்கு எனும் ஒருவகை பற்றியன. வாழ்நாள் சிறிது இளமை அரிது, முயற்சி, உயர்வு, குலமேம்பாடு அடைதல் சிறந்தது. வறுமை இழிவு, செல்வம், உடைமை, உயர்வு, அன்புபெரிது, பிரிவு துயர் மிகுந்தது. இவ்வாறு ஒன்றுடன் ஒன்று ஒவ்வாத இரண்டுமே தேவையான இருபக்கமும் இழுக்கின்ற நிலையில் பொருள் தேட ஊக்குகின்ற ஊழினை நினைத்து பேசுவான் தலைவன்.

### தலைவன் தலைவியை மணம்முடிக்க எண்ணுதல்

தலைவன் தலைவியுடன் உடன்போக நினைத்து தோழியிடம் வேண்டுகிறான். அங்ஙனம் தோழியானவள் தலைவனிடம் தனது தலைவியை உடன் அனுப்பி வைக்க மறுத்ததுடன், அவளை மண முடிக்க வேண்டுமெனில் அவளின் பெற்றோரிடம் சென்று பெண்கேட்க வேண்டும். அவ்வாறு கேட்டால் மண முடிக்க உடன்படுவார்கள் என கூறுகின்றாள். அதற்கு மறுமொழியாகத் தலைவன் தலைவிக்கு கேட்குமாறு தோழியிடம் நான் தலைவியை மணப்பது உறுதி. ஆதலால் நேரில் வருவேன் என உறுதியுடன் கூறுகின்றான். இதனை,

கருங்கோடடெருமைச் செங்கட் புனிற்றாக்
காதற்குழவிக்கு ஊறுமுலை மடுக்கும்
நுந்தை, நும்மூர் வருதும்
ஒண்தொடி மடந்தை நின்னையார் பெறினே[8]

இப்பாடலில் தலைவியை மணமுடிக்க எண்ணியத் தலைவன் தோழியிடம் தலைவியின் பெற்றோர் இசைவுடன் மணமுடிப்பேன் எனக் கூறுகிறான். அதாவது வரைவு மாட்சிமைப்படின் நானே வருவல் என்ற சொல்லின் மூலம் தலைவனின் மனஉறுதிப்பாடு வெளிப் படுகின்றன.

தலைவியின் பெற்றோர்கள் வேறு ஒருவருக்கு மணம் முடித்துக் கொடுக்க எண்ணியதை உணர்ந்த தலைவன், தோழியிடம் தலைவிக்கு கேட்குமாறு உனது தலைவியை உறுதியாக நானே மணமுடிப்பேன் எனத் தலைவன் கூறுவதன் மூலம் தலைவி மீது கொண்டுள்ள அன்பினை அறிய முடிகிறது.

### தலைவன் தன்நெஞ்சுக்குள் பேசி மகிழ்தல்

தலைவன் பரத்தையர் ஒழுக்கம் இல்லாத போதும் தலைவி பரத்தையர் ஒழுக்கம் இருப்பதாக கூறி முதலில் வெறுத்து பேசுகிறாள். பின்பு அவள் ஊடலை தீர்த்து கூடினான். அதன் இறுதியில் தன் நெஞ்சுக்குள்ளே ஊடல் தீர்ந்ததை எண்ணி அவன் நெஞ்சிடம் மகிழ்ந்து கொள்கிறான். இதனை

பகன்றைவால் மலர்மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்
பொய்கை, ஊரன் மகள், இவள்
பொய்கைப் பூவினும் நறுந் தண்ணியளே[9]

இப்பாடல் மூலம் சுட்டுகிறார். தாய் எருமையின் கொம்பில் கிடந்த பகன்றை மலரைக் கண்டு அதன் கன்று வேறுபட நினைத்து அஞ்சியது போல தலைவி, தலைவன் பரத்தையரோடு புறத்தொழுக் கம் கொண்டுள்ளான் என நினைத்து அஞ்சி, பின்பு தலைவனுடன் ஊடல் கொண்டாள். ஊடல் தீர்ந்த பின்பு தன் தலைவியானவள் எருமைக் கன்றுகள் வாழும் நீர் நிறைந்த பொய்கை உள்ள ஊரனின் மகளாவாள். அக்குளிர்ச்சி பொருந்திய பொய்கையில் மலர்ந்த ஆம்பல் பூவை விடக் குளிர்ச்சி பொருந்தியவள் தலைவி. என தன் நெஞ்சுக்குள்ளே பேசி மகிழ்கிறான் தலைவன். அதாவது, பொய்கையில் மலர்ந்த ஆமபல் மலரை விட தன்னுடைய ஊடலை தீர்த்ததால் இவளும் குளிர்ச்சியை உடையவள் என தன்குள்ளே பேசி மகிழ்வதை இப்பாட லின் வாயிலாக அறிய முடிகிறது.

### தலைவியின் பண்பினைத் தலைவன் வியந்து கூறல்

இயற்கைப் புணர்ச்சியில் தலைவனைச் சந்தித்த தலைமகள் புணர்ந்து நீங்கி தன் தோழியரை அடைந்தாள். அவ்வாறு சென்ற தலைமகளின் அருமையினை தலைவன் தன் நெஞ்சிடம் பேசி வியந்து கொள்கிறான். இதனை புலவர் அம்மூவனார்,

திரை இமிழ்இன் இசை அளைஇ அயலது
முழவு இமிழ்இன் இசை மறுகுதொரு இசைக்கும்
தொண்டி அன்ன பணைத் தோள்[10]

என்ற இப்பாடல் மூலம் சுட்டுகிறார். கடல் அலைகள் ஒலிக்கும் இனிய ஒலியுடன் முழவு முழங்கும் ஓசை தெருக்களில் முழங்கும் தொண்டி, அத்தொண்டி நகரத்தைப் போன்ற பருத்த தோள்களையும், ஒளி பொருந்திய கொடி யையும் உடைய தலைவி வலிமையுடைய என் நெஞ்சத்தைப் புணர்ச்சியின் மூலமாக கவர்ந்து கொண்டாள். ஆதலால் தலைவியை திரும்பவும் கூடிப் புணர்ச்சி பெறுவது இயலாத ஒன்றாகும் என தன் நெஞ்சுக்குள்ளே கூறிக் கொள்வதனை இப்பாடலின் வாயிலாக காண முடிகின்றது.

### தலைவன் தோழனுக்கு பதிலளித்தல்

இயற்கைப் புணர்ச்சிக்கு பின்னர்

தலைவன் தலைவியின் பிரிவால் தலைவியின் நினைவுகள் அவனுக்கு தோன்றியதால் உறக்கமின்றி மனம் வருந்தினான். அதனைக் கண்ட பாங்கன், உன் வருத்தத்திற்கு காரணம் என்ன என்று வினவ அதற்கு தலைவன் பதில் கூறுகிறான். இதனை,

**ஒண்நெடி அரிவை கொண்டனன் நெஞ்சே!**
**வண்டுஇமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்**
**உரவுக்கடல் ஒலித்திரை போல**
**இரவினாலும் துயில் அறியேனே**[11]

என்ற இப்பாடலில் ஒளி பொருந்திய தொடியை அணிந்த பெண்ணாவள் தன் நெஞ்சைக் கவர்ந்து கொண்டாள். ஆதலால், வண்டுகள் ஒலிக்கும் குளிர்ந்த துறையை உடைய தொண்டி நகரத்துப் பரந்த கடலில் எழுந்து முழங்கும் அலைகளைப் போல் இரவிலும் உறக்கம் கொள்ளாமல் இருக்கின்றேன் என தன்னிடம் வினவிய பாங்கனுக்கு தலைவன் கூறுவதாகும். அதாவது தலைவியை பற்றிய நினைவுகள் தலைவனுக்கு வருவதால் அவனும், கடல் அலைகள் போல் எப்போதும் உறங்காமல் இருப்பதை இப்பாடலின் வாயிலாக அறிய முடிகிறது.

## தலைவன் தோழியிடம் பேசும் முக்கியமான சூழல்கள்

தலைவன் தலைவயின் களவு, கற்பு காலத்தில் இருவருக்கும் இடையே ஒரு தூது பொருளாக செயல்பட்டு வருகிறாள் தோழி அவளிடம் தலைவன் பல சூழல் களில் பேசுகிறான். இதனை தொல்காப்பியர்,

**பண்பிற் பெயர்ப்பினும், பரிவுற்று மெலியினும்**
**அன்புற்று நகினும் அவட்பெற்று மலியினும்**
**ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக் கியல்பே**[12]

தலைவன் தோழியிடம் பேசுவதற்கான மனநிலைகள், தோழி இக்களவு பண்பு டைமைக்கு அழகன்று மறுக்கும் போதும், காமத்தால் தான் மிகவும் பரிதவித்து மெலியும் போதும், தோழி அன்புடன் தன்னை கேலிக் குறிப்புடன் பேசும் போதும், அத்தோழியின் உடம்பாடு பெற்று மகிழும் போதம், தான் வரும் வழியில் இடையூறுகள் நேர்தலை உணர்த்துமிடத்தும் தலைவன் பேசுவான். இது பண்புடைமைக்கு அழகன்று எனக் கூறிக் களவைத் தோழி மறுக்குமிடத்தும் காமத்தால் மிகப் பரிதவித்து உடல் மெலியும் போதும், அன்பு தோன்ற நகையாடித் தோழி மறுக்கும் போதும் தான் வரும் வழியின் இடையூறுகள் பற்றிக் கூறும் போதும் தலைவன் பால் கூற்று நிகழும் என்பதை அறிய முடிகின்றது.

இவ்வாறு தலைவன் பேசுமிடங்களையும் எந்த சூழ்நிலையில் கூற்று நிகழத்து கிறான் என்பதையும் அறிய முடிகிறது.

## முடிவுரை

சங்க அகப்பாடல்களில் மாந்தர்களின் கூற்றுக்களில் களவுக்குரிய மாந்தர்கள், கற்புக்குரிய மாந்தர்கள் என இருவகை யாகப் பிரித்து இவர்கள் யார் யாரிடம் எம்மொழியில் பேச வேண்டம். பேசும் சூழல்கள் குறித்தும் தொல்காப்பியர் கூறிச் சென்றுள்ளதையும் ஒவ்வொரு திணையிலும் தலைவன் தலைவியிடம் பேசும் சூழல்களையும் விளக்கிக் கூறுவதையும் காணமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், நூ 1445.
2. மேலது, நூ. 1446.
3. மேலது, நூ. 1048.
4. மேலது, நூ. 1056.
5. மேலது, நூ. 1039.
6. மேலது, நூ. 1044.
7. மேலது, நூ. 987.
8. ஐங்குறுநூறு,பா.எண் 92.
9. மேலது, நூ. 97.
10. மேலது, நூ. 171.
11. மேலது, நூ. 172.
12. தமிழண்ணல்,தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், நூ 1049.

## துணைநூற்பட்டியல்

1. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம், 45, தானப்ப முதலி தெரு, மதுரை – 625 001.
2. சோமசுந்தரனார் பொ.வே (உ.ஆ), ஐங்குறுநூறு மூலமும் உரையும், திருநெல்வேலி தென்னிந்திய, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 18.
3. மாணிக்கனார்.அ (உ.ஆ), ஐங்குறுநூறு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், தி.நகர், சென்னை – 600 017. பதிப்பு 1998.